செ.வெ.எண்.20 நாள்:11.04.2019

**தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் நகராட்சி மற்றும் துளிர் சிறப்பு குழந்தைகள் பள்ளி இணைந்து நடத்திய வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் காயல்பட்டிணம் நகராட்சி மற்றும் துளிர் சிறப்பு குழந்தைகள் பள்ளி இணைந்து நடத்திய வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.04.2019) நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசியதாவது:-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் எந்த ஒரு வாக்காளரும் விடுபடக்கூடாது என்பதற்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களிடம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக 18 வயது பூர்த்தியடைந்த இளம் வாக்காளர்கள் நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்திய தேர்தல் ஆணையம், நடைபெறவுள்ள தேர்தலில் மாற்றுத்திறனாளிகளும் வாக்களிக்க செய்ய வேண்டும் என தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் PWD லோகன் திரு.கார்த்திக் என்பவர் நியமிக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக வாக்குச்சாவடி மையங்களில் சாய்வு தளம் வசதிகள், கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. வாக்காளர்கள் எந்த ஒரு பரிசு பொருட்கள், பணம் பெறாமல் நேர்மையாக வாக்களிக்க வேண்டும்.

இந்திய தேர்தல் ஆணையம், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளை மீறும் நபர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளது. தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்க C Vigil App பயன்படுத்தப்படுகிறது. இதில் புகார்கள் பதிவேற்றம் செய்தால் மாவட்ட கட்டுப்பாட்டு அறைக்கு வரும். பின்னர் சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபடும் பறக்கும் படை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்து 100 நிமிடத்திற்குள் புகார்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து பதிவேற்றம் செய்யப்படும். மேலும், தேர்தல் தொடர்பான புகார்கள் மற்றும் வாக்குச்சாவடி விபரங்களை அறிந்து கொள்ள 1950 என்ற இலவச தொலைபேசியை பயன்படுத்தலாம். தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த தேர்தலில் 71 சதவிதம் வாக்குகள் பதிவாகியுள்ளது. நடைபெறவுள்ள தேர்தலில் 100 சதவீதம் வாக்குகள் பதிவு செய்ய அனைத்து வாக்காளர்களும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசினார்.

முன்னதாக மாணவ, மாணவிகளின் வாக்காளர் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி மற்றும் தேர்தல் விழிப்புணர்வு ரங்கோலி கோலத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பார்வையிட்டார். மேலும் காயல்பட்டிணம் நகராட்சி சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு வாகன பணிகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.அனு, இ.ஆ.ப., துளிர் சிறப்பு குழந்தைகள் பள்ளி முதல்வர் திருமதி.சித்திரம்ஜான், வாவு வஜிஹா பெண்கள் கல்லூரி முதல்வர் முனைவர்.வாசுகி, காயல்பட்டிணம் நகராட்சி ஆணையர் திரு.முருகன் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.